## இலங்கை சுற்றுலா மேம்படுத்தல் பணியகம் - 2015

இலங்கை சுற்றுலா மேம்படுத்தல் பணியகத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2005 இன் 38 ஆம் இலக்க இலங்கை சுற்றுலா அலுவல்கள் அதிகாரச்சட்டத்தின் 20 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் பணியகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பணியகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி பணியகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, இலங்கை சுற்றுலா மேம்படுத்தல் பணியகத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள்**

கீழே குறிப்பிடப்பட்ட இணங்காமைகள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 02

வட்டிப் பெறுவனவு மற்றும் வட்டிக் கொடுப்பனவுகளின் மீதான காசுப்பாய்ச்சல் ஒவ்வொன்றும் வெவ்வேறாக வெளிப்படுத்தப்பட வேண்டியதுடன் அவ் ஒவ்வொறு செயற்பாடுகளும் முதலீடு அல்லது நிதி நடவடிக்கைகள் என காலப்பகுதிக்குள் அமையும் வகையில் வேறுபடுத்த வேண்டும். எவ்வாராயினும் நிறுவனத்தின் மூலம் வட்டி பெறுவனவுகள் மற்றும் வட்டி கொடுப்பனவுகள் மீதான காசுப்பாய்ச்சல்கள் வெவ்வேறாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07

அருவச் சொத்தான ரூபா 1,592,770 பெறுமதியான கணனி மென் பொருட்களின் கிரயம் நிலையான சொத்துக்கள் மற்றும் உபகரணங்களின் கீழ் குறிப்பிடப்பட்டிருந்தன.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 ஆம் ஆண்டில் இரண்டு மோட்டார் வண்டிகள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு அப் பெறுமதி கணக்குப்பதிவின் போது ஏற்பட்ட கணக்கீட்டுத் தவறினை மீளாய்வாண்டில் சரிசெய்கையில் மீண்டும் தவறாகவே கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதன் காரனமாக மோட்டார் வண்டிக் கணக்கு ரூபா 2,100,000 இனால் அதிகரித்தும் திரண்ட இலாபக் கணக்கு ரூபா 1,600,000 இனால் குறைத்தும், மோட்டார் வண்டி தேய்மான ஏற்பாட்டுக் கணக்கு ரூபா 3,300,000 இனால் அதிகரித்தும் மற்றும் ஆண்டுத் தேய்மானம் ரூபா 400,000 இனால் குறைத்தும் கணக்குகளில் குறிப்பிடப்பட்டிருந்தன.

(ஆ) மேம்படுத்தலுக்காக வெளிநாட்டு தூதரங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்ட பணத்தில் மீளாய்வாண்டின் இறுதியில் எஞ்சிய ரூபா 33,647,581 மீதி இறுதிக் கணக்குகளில் பெறவேண்டிய மீதியாக காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சர்வதேச இந்திய திரைப்பட விருது வழங்கும் விழாவிற்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 196,800 பெறுமதியான கணனி உதிரிப்பாகங்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

ரூபா 7,449,005 கூட்டுத்தொகையான கிடைக்க வேண்டிய 04 மீதிகள் சம்பந்தமாக உறுதிப்படுத்தும் சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பணியகத்தின் நிதிக்கூற்றுகளில் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபைக்கு செலுத்த வேண்டிய மீதி ரூபா 14,600,904 ஆக இருந்த போதிலும், சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களில் பணியகத்திலிருந்து பெறவேண்டிய மீதி ரூபா 13,559,157 ஆனமையால் வேறுபாடு ரூபா 1,041,747 ஆகக் காணப்பட்டது.

### 2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) பெறவேண்டிய மீதிகளில் ரூபா 2,448,920 கூட்டுத்தொகையானது 5 வருடங்களை விஞ்சியதாகவும், ரூபா 1,235,000 கூட்டுத்தொகை 03 வருடம் முதல் 05 வருடங்களுக்கிடைப்பட்டதாகவும், ரூபா 2,105,725 கூட்டுத்தொகை 01 வருடத்திற்கும் 03 வருடத்திற்குட்டதாகவும் மற்றும் ரூபா 791,396,409 கூட்டுத்தொகை 01 வருடத்துக்கு குறைந்த காலத்தையும் உள்ளடக்கிய பழைய மீதிகளாக காணப்பட்டன.

(ஆ) வெளிநாட்டு தூதரகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்ட பணத்தில் சீனா தூதரக காரியாலயத்தில் இருந்து அறவிடவேண்டிய 03 வருடங்களை விஞ்சிய கடன்பட்டோர் மீதி ரூபா 19,731,593 ஆக இருந்ததுடன் ஏனைய தூதரக காரியாலயங்களில் இருந்து ஒரு வருடத்திற்கும் குறைவான அறவிடவேண்டிய கடன்பட்டோர் மீதி ரூபா 23,785,475 ஆக காணப்பட்டது.

(இ) செலுத்த வேண்டிய மீதிகளில் ரூபா 48,000 தொகை 5 வருடகாலத்தை விஞ்சியதாகவும், ரூபா 1,229,280 தொகை 4 வருடகாலத்தை விஞ்சியதாகவும், ரூபா 6,607,680 தொகை 3 வருடகாலத்தை விஞ்சியதாகவும், ரூபா 921,367 தொகை ஒரு வருடகாலத்தை விஞ்சியதாகவும் மற்றும் ரூபா 5,794,577 ஒரு வருடத்துக்கு குறைந்த காலத்தையும் உள்ளடக்கிய பழைய மீதிகளாக காணப்பட்டன.

(ஈ) 5 வருடங்களை விஞ்சிய காலத்தில் இருந்து கணக்குகளில் முற்பணமாக காட்டப்பட்டுள்ள ரூபா 1,575,000 ஆன முற்பணத் தொகை மீளாய்வாண்டின் இறுதி வரை தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) பணியகத்திற்கு கிடைக்கப் பெற்றிருந்த ரூபா 50,000 ஆன மதிப்பிழந்த ஓர் காசோலை பெறவேண்டிய மீதியாக குறிப்பிடப்படாது பணம் மற்றும் பணத்திற்கு சமனான பெறுமதியாக நிதிக்கூற்றுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா அலுவல்கள் அதிகாரச்சட்டத்தின் VII ஆம் அத்தியாயத்தின் 40 ஆம் பிரிவின் 09 ஆம் உபபிரிவு | ஒவ்வொரு கலண்டர் வருடத்தின் இறுதியிலும் மூன்று மாதங்கள் கழிவதற்கு முன்னர் அமைச்சருக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய அவ் ஆண்டின் பணியகத்தின் வேலை தொடர்பான அறிக்கை, கலண்டர் ஆண்டின் ஏழு மாதங்கள் முடிவடைவதற்கு முன்னர் அரையாண்டு கணக்கறிக்கை, எதிர்வரும் 03 வருட கால எல்லையில் எதிர்பார்க்கப்பட்ட திட்டங்கள் மற்றும் முன்னைய ஆண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டம் தொடர்பான செயலாற்றுகை மேலும் அடைவுகள் உள்ளடக்கிய கூற்று என்பன அமைச்சருக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் 10 ஆம் பிரிவின் 5 ஆம் உப பிரிவு | மீளாய்வாண்டில் ரூபா 906,783,522 தொகையான மிகையொன்று பெறப்பட்டிருந்ததுடன் நிதிஅதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளில் குறிப்பிடப்படும், நிதிப் பிரயோகத்தின் பின்னர் வருடத்தின் தேறிய மிகை வருமானத்தில் எஞ்சுகின்ற சகல பணமும் திரட்டு நிதியத்திற்குச் மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை |
| (இ) 2014 மார்ச் 04 ஆம் திகதிய இலக்கம் MM1/1/160/(vii) உடைய ஊடகம் மற்றும் செய்திகள் அமைச்சின் செயலாளரின் கடிதம். | மேம்படுத்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளும் சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனங்களிருந்து தொலைக்காட்சி நிகழ்ச்சிகளுக்கான ஆலோசனைகள் பெற்றுக்கொள்ளும் அதிகாரம் வழங்கப்பட்டிருந்த போதும் அவ்வாறு ஆலோசனைகள் பெற்றுக் கொள்ளப்படாமல் பணிப்பாளர் சபை தீர்மானத்திற்கு அமைய மதிப்பிடப்பட்ட பெறுமானம் ரூபா 50,000,000 இற்காக இரண்டு நிறுவனங்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தன. |
| (ஈ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் அத்தியாயத்தின் 9.14.2 ஆம் பிரிவு | மனிதவள முகாமைத்துவம் தொடர்பாக சகல விடயங்கள் சம்பந்தமாக விதிக்கப்படுகின்ற விதிகள் மற்றும் பிரமாணங்கள் திறைசேரி செயலாளரின் இணக்கப்பாட்டுடன் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், பணியகம் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

| | |
|---|---|
| (உ) 2011 பெப்ரவரி 11 ஆந் திகதிய பீஈடீ/57 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | ரூபா 2,000,000 பெறுமதியை விஞ்சிய பொது நிறுவனங்கள் மற்றும் அரச அபிவிருத்தி திட்டங்களுக்காக செய்யப்படும் பொறுப்பேற்றல் செலவுகள் அல்லது அன்பளிப்புகளுக்காக மற்றும் அதற்கு வெளிவாரியாக செலுத்தப்படும் ரூபா 100,000 யை விஞ்சிய பொறுப்பேற்றல் செலவுகள் அல்லது அன்பளிப்புகளுக்காக நிதி அமைச்சரின் அங்கீகாரம் பெறப்பட வேண்டிய போதிலும் 2015 ஆம் வருடத்தில் அவ்வாறு அங்கீகாரம் பெறப்படாமல் பொறுப்பேற்றல் செலவுகள் மற்றும் அன்பளிப்புகளுக்காக ரூபா 41,767,500 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி, 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பணியகத்தின் செயற்பாடுகளிலிருந்தான நிதி விளைவுகள் ரூபா 1,406,783,523 மிகையொன்றானதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 526,471,234 ஆனமையால் நிதி விளைவுகளில் ரூபா 880,312,289 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. வியாபாரம் தொடர்பான செலவினங்கள் ரூபா 749,052,169 ஆல் குறைவானது இந்த அதிகரிப்புக்கு பிரதான காரணங்களாக தாக்கமழித்திருந்தன.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 வருட நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2011 ஆம் வருடத்தில் ரூபா 658,411,571 ஆன மிகையானது ஏற்ற இறக்கத்துடன் 2015 ஆம் ஆண்டு இறுதியில் ரூபா 906,783,522 ஆக வளர்ச்சியடைந்துள்ளது. ஊழியர்களது ஊதியம், அரசிற்கு செலுத்திய வரிகள் மற்றும் நடைமுறையல்லாத சொத்துக்களுக்கான தேய்மானம் கவனத்தில் எடுக்கையில் 2011 வருட பங்களிப்பு ரூபா 688,511,162 ஆகவும் 2015 வருடத்தில் ரூபா 1,475,892,784 வரை வளர்ச்சியடைந்து இருந்தது.

### 3.2 நிறுவனத்திற்கு எதிராக தொடங்கப்பட்டுள்ள சட்டரீதியான சம்பவங்கள்

சர்வதேச இந்திய திரைப்பட விருது வழங்கும் விழாவிற்காக ரூபா 83,899,947 கொடுப்பனவை வழங்குமாறு கோரி பணியகத்திற்கு எதிராக தொடரப்பட்டிருந்த 03 வழக்குகள் மற்றும் இரண்டு வெளித்தரப்பினர் பணியகத்திற்கு எதிராக தொடரப்பட்டிருந்த 02 வழக்குகள் மீளாய்வாண்டு இறுதி வரையிலும் தீர்க்கப்படாமல் காணப்பட்டன.

### 3.3 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய இரண்டு ஆண்டுகளிற்காக கணிப்பிடப்பட்ட தொழிற்படு மூலதன விகிதத்தின் படி உயர் திரவத்தன்மை பேணப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் தொடர்ச்சியாக குறுங்கால முதலீடுகளில் பணத்தை ஈடுபடுத்தியிருந்தமை இதற்குக் காரணமாக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

**(அ)** 2005 இலக்கம் 38 ஆம் சுற்றுலா நடவடிக்கைகள் சட்டத்தின் 40(4) பிரிவிற்கு அமைய பணியகத்தின் நோக்கம் பின்வருமாறு.

(i) அதிகாரசபையின் ஆலோசணைகளை கோரி சுற்றுலா அபிவிருத்தி திட்டத்திற்கு அமைவாக விஷேட சுற்றுலா மற்றும் சுற்றுலாப் பயணமுடிவு என நேரடியாக அல்லது மறைமுகமாக இலங்கையை சுற்றுலா துறையில் சந்தைப்படுத்தல் மற்றும் மேம்படுத்தல்.

(ii) தெற்கு ஆசியவலயத்தின் நுழைவாயிலாக இலங்கையை மேம்படுத்தல்.

(iii) வலயத்தின் சிறந்த சுற்றுலாக் கைதொழில் முகாமை மற்றும் அபிவிருத்தி மத்திய இஸ்தலமாக இலங்கையை பிரசித்தப்படுத்தல்.

**(ஆ)** மீளாய்வாண்டில் ரூபா 797 மில்லியன் ஆன வியாபார நடவடிக்கைகளின் செலவினத்திற்கு ஒப்பீட்டளவில் முன்னைய ஆண்டு செலவீனம் ரூபா 1,562 மில்லியனாக இருந்ததுடன் முன்னைய ஆண்டில் அச் செலவினங்களுடன் ஒப்பிடும் போது 49 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. எனினும் சுற்றுலாப் பயணிகளின் வருகை 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் 17.7 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. அவ்வாறு சுற்றுலா கைதொழிலினால் இலங்கை பெற்ற வருமானத்தை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ஐக்கிய அமெரிக்க டொலர் 0.549 பில்லியன் அதாவது 22.58 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. அதன் பிரகாரம் வியாபார செலவினங்கலின் குறைவு மற்றும் அதிகரிப்பு சுற்றுலாப் பயணிகளின் வருகை அல்லது வருமானம் மாற்றம் அடைவதற்கு நேரடியாகத் தாக்கமளித்தமை உறுதிப்படுத்தப்படவில்லை.

### 4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்
------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ)** சர்வதேச நடன விழாவிற்காக அனுசரணைப் பங்களிப்பை பெற்றுத்தந்மைக்காக பணியகத்தினால் தனியார் நிறுவனம் ஒன்றுடன் ஒப்பந்தத்தில் ஈடுபட்டு ரூபா 1,500,000 தொகை முற்பணம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் குறிப்பிட்ட விழா நடைபெறாத காரணத்தினால் கொடுப்பனவு செய்யப்பட்ட முற்பணத் தொகையை மீண்டும் அறவிடுவதற்கு முடியாதிருந்தது.

**(ஆ)** 2014 ஆண்டில் ரூபா 70,321,758 தொகை செலவு செய்து தனியார் நிறுவனம் ஒன்றினால் (Global Television Campaign) எனும் பெயரில் இரண்டு தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் 2014 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அல் ஜசீரா தொலைக்காட்சி சேவை ஊடாக அந் நிகழ்ச்சிகள் கணக்காய்வுத் திகதியான 2017 மே 31 திகதி வரை விளம்பரமானது உறுதியாகவில்லை.

### 4.3 தொழிற்பாட்டு செயற்பாட்டுகள்
------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ)** வெளிவிவகார அமைச்சினூடாக வெளிநாடுகளில் மேற்கொள்ளப்படும் மேம்படுத்தல் நடவடிக்கைகளுக்காக தெரிவு செய்யப்பட்ட நிறுவனங்களுக்கு ரூபா 18,986,187 தொகை முற்கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் அதற்காக சட்டரீதியான ஒப்பந்தம் காணப்படாததுடன் வங்கிப்பிணையும் பெறப்பட்டிருக்கவில்லை.

**(ஆ)** ரூபா 3,506,757 கூட்டுத்தொகையாக செலவில் 12 சீன ஊடகவியலாளர்களை உள்ளடக்கிய குழுவொன்றிற்கு இலங்கையின் சுற்றுலாத்துறையில் கவர்ச்சிகரமான சில பிரதேசங்களை மேவுகை செய்யும் வகையில் மேற்கொள்ளப்பட்ட FAM சுற்றுலா தொடர்பான அறிக்கை, சீன ஊடகங்கள் மூலம் விளம்பரப்படுத்தப்பட்டமைக்கான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையினால் சுற்றுலா தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட செலவுகள் விளைவற்றதாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## 4.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கள் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

**(அ)** 2014(ICC) உலகக் கிண்ண இருபதுக்கு இருபது கிரிக்கட் போட்டி தொடரில் சுவரொட்டி பிரசுரம் தொடர்பான பெறுனர் நடைமுறையில் , பெறுகை குழு தீர்மானம் 2014 ஏப்ரல் 28 ஆம் திகதி அன்று வழங்கப்பட்டிருந்த போதிலும், டெண்டர் திறக்கப்பட்ட 2014 ஏப்ரல் 08 ஆம் திகதி அன்றே தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு ஒன்று கூடி தமது அறிக்கையை பெற்றுக்கொடுத்தல், தனியார் றிறுவனம் ஒன்றினால் வரி உடன் ரூபா 700,000 ஆன பட்டியல் பெறப்பட்டமை மற்றும் கிரிக்கட் சுவரொட்டி சுற்றுலா மேம்படுத்தல் பணியகத்திற்கு கிடைக்கப் பெறவேண்டிய பொருட்கள் தொடர்பாக கையேற்பு பத்திரம் வெளியிடப்பட்டதன் காரணமாக இச்செயற்பாடு தெளிவுத் தன்மையுடன் இடம்பெற்றுல்லனவா என்பது தொடர்பாக கணக்காய்வின் போது திருப்தி அடைய முடியாது.

**(ஆ)** வெளிநாட்டு சுற்றுலா மேம்பாட்டு செயற்பாடுகள் தொடர்பாக 2014 ஆண்டில் தனியார் நிறுவனமொன்றிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,342,096 பெறுமதியான மேம்பாட்டுப் பொருட்கள் விணியோகிக்கப்பட்ட முறை தொடர்பபான தகவல்கள் சமர்பிக்கப்படாததுடன் அப் பொருட்கள் கொள்வனவின் போது பெறுகை வழிகாட்டல் கோவை மற்றும் நியமங்களுடனான தொடர்புகளின் பிரகாரம் (Terms of Reference) செயற்பட்டிருக்கவில்லை என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

## 4.5 வெளிப்படையான ஒழுங்கீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) ரஷ்யாவின் மொஸ்கோ நகரில் நடைபெற்ற சுற்றுலா மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்திற்காக (Leisure Travel and Tourism Fair - 2014) ரீசேட்டுக்கள் கொள்வனவு செய்வதற்காக ரூபா 7,800,000 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், அந்த ரீசேட் இருப்புக்கள் பணியகத்திற்கு கிடைக்கப் பெற்றிராததுடன் அக்கொள்வனவுகளுக்காக தயாரிக்கப்பட்ட பதிவேடுகளை ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

(ஆ) ஏற்றுக்கொள்ளப்பட்ட பெறுகை நடைமுறைகளுக்கு வெளியில் 2010 ஆம் ஆண்டு சர்வதேச இந்தியா திரைப்பட விழா (IIFA) விற்காக ரூபா 1,116,000 தொகை செலவில் கொள்வனவு செய்யப்பட்ட 07 மடிக் கணனிகள் மற்றும் 03 மேசைக் கணனிகள் களஞ்சியத்திற்கு கையேற்கப்பட்டமைக்கான அல்லது அலுவலர்கள் மத்தியில் விநியோகிக்கப்பட்டமைக்கான எழுத்து மூலச் சான்றுகள் சமர்பிக்கப்படாததுடன் அவை பௌதீக பரிசோதனைக்கும் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டில் நிதிக்கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 04 ஆந் திகதியே கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

## 5.2 செயல்நடவடிக்கைத் திட்டம்

-----------------------------------------

மீளாய்வாண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டம்மொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் இச்செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள செயற்பாடுகளின் முன்னேற்றங்களை காலரீதியில் பரீட்சிப்பதற்கான முறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5.3 உள்ளகக் கணக்காய்வு

--------------------------------------

உள்ளகக் கணக்காய்வு பணிகள் அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவுக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 133 பிரகாரம் உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 5.4 கணக்காய்வுக் குழு

-----------------------------

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.1 ஆம் பந்தியின் பிரகாரம் காலரீதியிலான கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு ஒன்றுக்கூடல் மூன்று மாதத்துக்கு ஒரு முறை நடாத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிக்கான கணக்காய்வுக் குழு ஒன்றுக்கூடல் ஒன்று மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தது.

## 5.5 பாதீட்டுக் கட்டுப்பாடு

-------------------------------

மீளாய்வாண்டிற்கான செலவு விடயங்கள் 28 இன் பாதீட்டுப் பெறுமானத்தையும் உள்ளபடியான பெறுமானத்தையும் ஒப்பிடும் போது 32 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சில் விலகல் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

## 5.6 பெறுகைகள் திட்டம்

-------------------------------------

2006 சனவரி 25 ஆந் திகதிய 08 ஆம் இலக்க தேசிய பெறுகைகள் சுற்றறிக்கையின் 04 ஆம் அத்தியாயத்தின் 4.2.1(அ),(ஆ) மற்றும் (இ) பிரிவின் பிரகாரம் எதிர்வரும் வருடத்திற்கான விரிவானதொரு திட்டத்துடன் ஆகக் குறைந்தது மூன்று வருடங்களை உள்ளடக்கும் வகையில் பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.7 தீர்க்கப்படாத கணக்காய்வு பந்திகள்

----------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 நவம்பர் 03 ஆந் திகதி முதல் 06 வரை ஐக்கிய இராச்சியத்தில் நடைபெற்ற வர்த்தகக் கண்காட்சிக்காக பெறுகைகள் நடைமுறைகளுக்குப் புறம்பாக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 350,000 பெறுமதியான 02 இரத்தினக்கற்கள் மற்றும் இலவசமாக பணியகத்திற்குக் கிடைத்த 02 இரத்தினக்கற்கள் என்பன களஞ்சிய இருப்புப் புத்தகங்களில் உள்ளடக்கப்படாதிருந்ததுடன் இலவசமாகக் கிடைத்த 02 இரத்தினக்கற்கள் என்பவற்றின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபையின் பரிசோதனை அறிக்கையின் பிரகாரம் கரட் 1.4, 1.6, 1.63 மற்றும் 1.54 நிறை கொண்ட 04 இரத்தினக் கற்கள் பணியகத்திற்குக் கிடைத்திருந்ததினால் ரூபா 350,000 இற்குக் கொள்வனவு செய்யப்பட்ட இரண்டு இரத்தினக் கற்களின் நிறை 5.6 கரட் ஆனமையால் ஆபரணங்கள் அதிகாரசபையின் பரிசோதனை அறிக்கை மற்றும் விலைப்படியலில் குறிப்பிடப்பட்ட விபரங்கலின் பிரகாரம் இரத்தினக் கற்களின் கரட் நிறை இணங்காதிருந்தது.

(ஆ) 2014 ஆண்டின் உலக சுற்றுலா தினத்திற்கென குறிப்பிட்டு ரூபா 5,824,000 தொகை செலவில் அச்சிடப்பட்டிருந்த ரீசேட், அவ் விணியோக நிறுவனத்தின் பணிப்பாளரின் கூற்றின் பிரகாரம் அரசியல்கட்சியொன்றின் பிரசார நடவடிக்கை ஒன்றிற்காக அச்சிடப்பட்டு இருந்தது.

(இ) சுற்றுலா துறைகளில் சமூகப் பொறுப்புக்களை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் ஒன்றை அமுல்படுத்துவதற்காக இரண்டு தனியார் நிறுவனங்களுக்கு ரூபா 99,439,900 (வரி தவிர்த்து) தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் அக்கொடுப்பனவு ஏற்றுக்கெள்ளப்பட முடியாத கொடுப்பனவு என அவதானிக்கப்பட்டது.

(ஈ) ஐக்கிய இராச்சியத்தில் நடைபெற்ற வர்த்தகக் கண்காட்சி (WTM(UK)2014) இற்காக வர்த்தகக் கண்காட்சி கொட்டகைகளை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தம் வழங்கும் போது கூறுவிலை கோரல் கடிதம் திறக்கப்பட வேண்டிய திகதிக்கு 4 நாட்களுக்கு முன்னர் திறக்கப்பட்டமை, கேள்விதாரர் அல்லது முகவரொருவர் கேள்விக் கடிதத்தைத் திறக்கும் சந்தர்ப்பத்திற்கு சமூகமளிக்காமை, ஒப்பந்தக்காரர் பிரித்தானிய தூதுவர் அலுவலகத்துடன் உடன்படிக்கை கைச்சாத்திட்டு அதன் பிரதியொன்று மேம்படுத்தல் பணியகத்திற்கு அனுப்பிவைக்கப்பட வேண்டியமைக்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் மற்றும் வர்த்தகக் கண்காட்சி கொட்டகைகளை வெற்றிகரமானதாக நிர்மாணிக்கப்பட்டமைக்கு பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தரின் சான்றிதழொன்று இல்லாமல் அந் நிர்மாணங்களுக்காக ரூபா 17,803,508 தொகைக் கொடுப்பனவொன்று பணியகத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு குறைபாடுகள் அவ்வப்போது பணியகத்தின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத்துறை | அவதானங்கள் |
|---|---|---|
| (அ) | கணக்கீடு | இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் கணக்கீடு செய்யப்படாமை, மீள் மதிப்பீடு செய்யப்பட்ட சொத்துக்களின் பெறுமதி சரியாக பதியப்படாமை மற்றும் பெறப்படவேண்டிய கணக்குகள் சரியான கணக்குகளில் வெளிப்படுத்தப்படாமை. |
| (ஆ) | பாதீடு | பாதீடு மற்றும் உள்ளவாரான செலவினங்களில் கவணிக்கத்தக்க முரன்பாடு நிலவுகின்றமை. |
| (இ) | மனிதவள முகாமைத்துவம் | ஆளணி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | பெறுகைகள் | வழிகாட்டிக் கோவையிக்கு சாதகமாக செயற்படாமை. |